**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRIC MUNSIF CUM JUDICIAL MAGISTRATE MADATHUKULAM

| | | |
|---|---|---|
| Calender | : | CC 332/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosectuion (Pw 3 ) |
| | : | |
| Name | : | Mayilathal |
| Father's Name | : | Kalimuthu |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with he provision of act X of 1873

of the 01st day of March 2021

நாள் **CC 332/2019** அ.சா **3**

பெயர் மயிலாத்தாள் த/பெ. காளிமுத்து

(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)

நான் கருப்பட்டி பாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . ஆஜர் எதிரி கண்ணன் மற்றும் கலைசெல்வி, செல்வராஜ், கருப்பசாமி ஆகியோர்களை தெரியும். 4 எதிரிகளையும் பூமி வாங்கியதால் தெரியும் . அசா 1 கன்னிமுத்து, அசா 2 சரஸ்வதி ஆகியோர்களை தெரியும் . கடந்த 11.12.2016 அன்று கன்னிமுத்துவின் தோட்டத்திற்கு அருகில் தடத்தில் காலையில் 09 மணிக்கு சரஸ்வதி, கன்னிமுத்து நின்று கொண்டிருந்தார்கள் . கண்ணன் , கலைச்செல்வி ஆகியோர் வந்தார்கள் அப்போது கன்னிமுத்துவும் , சரஸ்வதியும் நடக்க கூடாது என்றார்கள் அதற்கு கண்ணனும் , கலைச்செல்வியும் அவர்கள் பூமி நடப்போம் என்று கூறி சென்று விட்டார்கள். பின்னர் மாலை 04 மணிக்கு கண்ணன், கலைச்செல்வி, கருப்பசாமி, செல்வராஜ் ஆகியோர்கள் கையில் தடி கொண்டு வந்தார்கள் . நீ எப்படி கலையில் அப்படி பேசினாய் என்று கேட்டு கன்னிமுத்துவையும் , சரஸ்வதியையும், கண்ணன் மற்றும் கலைச்செல்வி தடியால் தலையில் அடிக்கும் போது கருப்பசாமியும் , செல்வராஜும் சேர்ந்து கொண்டு அடித்தார்கள் . சரஸ்வதியை வயிற்றில் எட்டி உதைத்தார்கள். இதில் தப்பித்தீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். 4 எதிரிகளும் கிளம்பி விட்டனர். பின்னர் கன்னிமுத்து, சரஸ்வதியின் மகன்கள் வந்து கன்னிமுத்துவையும் , சரஸ்வதியையும், காரில் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் . கன்னிமுத்துவை உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வைத்துவிட்டு , சரஸ்வதியை கோவை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை